# <u>ஆறுபடை வீடு தொழில்நுட்பக்கல்லூரி</u>

## <u>'திருக்குறள் செம்மல்' ந.மணிமொழியனார் முத்தமிழ் ஆயம்</u>
## <u>நாட்டுப்புற இசை விழா</u>



ஆறுபடை வீடு தொழில்நுட்பக் கல்லூரியில், திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழ் ஆயம் பண்பாட்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு விநாயகா மிஷன்ஸ் ரிசர்ச் பவுண்டேசன் வேந்தர் டாக்டர். ஏ. எஸ். கணேசன் மற்றும் அதன் இயக்குநர் டாக்டர் அனுராதா கணேசன் அவர்களும் தலைமை தாங்கினர். விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக பத்மஸ்ரீ விஜயலட்சுமி நவநீத கிருஷ்ணனும், பிரபல எழுத்தாளர் திருமதி கொற்றவை அவர்களும் அழைக்கப்பட்டிருந்தினர்.

விழா எற்பாடுகளை மகளிர் மேம்பாட்டு குழு தலைவி முனைவர் சங்கீதா மற்றும் கல்லூரியின் தலைமை நிர்வாக அலுவலர் திரு ஸ்ரீநிவாசன் அவர்களும் செய்திருந்தனர்.

விழாவின் தொடக்கத்தில் ஆறுபடைவீடு பொறியியல் கல்லூரி, திருக்குறள் செம்மல் மணிமொழியனார் முத்தமிழ்ஆயம், இரண்டாவது நிகழ்வாக நடுவணரசு வழங்கிய பத்மஷிரிவிருது பெற்ற நாட்டுப்புற இசை இரட்டையர்கள் விசயலட்சுமி நவநீதக்கிருஷ்ணன் அவர்கள் கலந்துகொண்டு, “திருக்குறள் செம்மல் மணிமொழியனார் பெயரில் முத்தமிழ் ஆயம் தொடங்கி இருப்பது தமிழுக்குச் செய்யும் பெருந்தொண்டு, அவரின் திருக்குறள் ஆய்ந்தறிவு செயல்விளக்கமாகும் அவர் நடமாடும் திருக்குறளாக வாழ்ந்தவர்,, மிக உயர்ந்த வழிகாட்டியாவார்” எனபுகழுரை வழங்கினார்,, முத்தமிழ் ஆய நிகழ்வினை, கவிஞர் மார்சல் முருகன் தொகுத்துவழங்கினார். பேராசிரியர்களும்,, ஐநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களும்,

கலந்துகொண்டனர். ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் முத்தமிழ் ஆயம் தமிழ் சான்றோர்களை அழைத்து முத்தமிழ் அரங்கு நடத்துவது என அறிவித்தது.











FOUNDATION
dited by NAAC)
erment Cell and Students
ELEBRATION - 20
ndoor Auditorium
Guests of Ho
Presided by
Vinayaka Miss
Writer
Founder –


Dr. A.S GANESAN
Honourable Chancel
issions Research
Salem